TNJR

Reg.No. | | | | | | |

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2019

காலம்:2.30மணி　　வகுப்பு – 9　　மதிப்பெண்கள்: 100

## தமிழ்

### பகுதி – I (மதிப்பெண்கள் 15)

15 x 1 = 15

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. தமிழ் விடு தூது ............ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) தனிப்பாடல் ஈ) சிற்றிலக்கியம்
2. மல்லல் மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய
3. ஐம்பெருங்குழு எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் ..........
அ) திசைச் சொற்கள் ஆ) தொகைச் சொற்கள் இ) வடசொற்கள் ஈ) உரிச்சொற்கள்
4. தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுத்தல் ஆ) குணம், குற்றம் இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
6. பொருந்தாதவற்றைக் கண்டறிக.
அ) மயில்சாமி அண்ணாதுரை ஆ) அப்துல் கலாம் இ) வைரமுத்து ஈ) சிவன்
7. கீழ்க்கண்டவற்றுள் சங்க கால பெண்பாற் புலவர் இல்லாதவர்
அ) ஔவையார் ஆ) ஆதிமந்தி இ) ஆண்டாள் ஈ) பொன்முடியார்
8. பூவாது காய்க்கும் மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம் உவமைத்தொகை
9. சாகித்ய அகெதமி விருது பெற்ற பாரதிதாசனின் நூல் எது?
அ) பிசிராந்தையார் ஆ) இருண்ட வீடு இ) அழகின் சிரிப்பு ஈ) தமிழியக்கம்
10. மரவேர் என்பது ........... புணர்ச்சி.
அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
11. தமிழக அரசு சிற்பக் கல்லூரியை நடத்தி வருகின்ற இடம்
அ) கும்பகோணம் ஆ) மாமல்லபுரம் இ) மதுரை ஈ) சுவாமி மலை

பாடலை படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

சொல் அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கரு இருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்வி சேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

12. இப்பாடலின் ஆசிரியர்
அ) திருத்தக்கத்தேவர் ஆ) இளங்கோடிவடிகள் இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) புலவர் குழந்தை
13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர்
அ) இராவண காவியம் ஆ) முத்தொள்ளாயிரம் இ) சீவக சிந்தாமணி ஈ) மதுரைக்காஞ்சி
14. 'நற்றவம்' – இத்தொடரின் பொருள்?
அ) சிறிய உலகம் ஆ) பெருந்தவம் இ) சிறந்த ஈ) வெற்றி
15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச்சொற்களைக் குறிப்பிடுக.
அ) பாம்பின் தோற்றம் ஆ) சொல் அரும் செல்வமே இ) நிறுவித் தேர்ந்த ஈ) இறைஞ்சிக் காய்த்தவே

### பகுதி – II (மதிப்பெண்கள் 18)

#### பகுதி – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.

21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க. 4 x 2 = 8

16. அ) பல்லவர் காலத்தில் சுதை, கருங்கற்களால் சிற்பங்கள் அமைக்கப்பட்டன.

ஆ) கல்வி அறிவுள்ள பெண்கள் நன்செய் நிலத்தைப் போன்றவர்கள்.
17. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
18. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
19. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழர்கள் யாவர்?
20. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.
21. தலை என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி** **5 x 2 = 10**

22. ஆகுபெயரை எடுத்தெழுதுக.
அ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
ஆ) மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது.
23. பண்புத்தொகைக்ளை இட்டு நிறைவு செய்க.
(பேரூர், செந்தாமரை பேரின்பம், சிற்றோடை)
மானாமதுரை ஓர் அழகான ..........; நீண்ட வயல்களும் ........ களும் நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் .......... பூக்கள் மலர்ந்துள்ளன. இந்தக் காட்சி காண்போரை ........ அடையச் செய்கிறது.
24. பொருள் எழுதித் தொடரமைக்க.
அலை, அழை
25. கலைச்சொற்கள் தருக.
Electronic devices, Indian National Army
26. பண்பாகுபெயர், தொழிலாகுபெயர் - விளக்குக.
27. பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.
பெண்கள் ........... ப்படிக்க வைக்காத காலத்தில் ......... பெண் இனம் ......... பெருமை சேர்க்கும்படி ........ நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண்கள் மருத்துவர் ....... வந்தார்கள்.
28. ஆழ்ந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி - III (மதிப்பெண்கள் 18)

பகுதி - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.2 x 3 = 6**

29. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
30. நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள் கற்பனை உருவங்கள், முழுவடிவ உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால் அவர்களைக் 'கற்கவிஞர்கள்' என்று சிறப்பிக்கின்றனர்.

அ) சிற்பங்கள் எத்தனை நிலைகளில் அமைக்கப்படுகின்றன?
ஆ) 'கற்கவிஞர்கள்' என்று சிறப்பிக்கப்படுவோர் யாவர்?
இ) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.2 x 3 = 6**
**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க.**

32. நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.
33. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
34. அடிபிறழாமல் எழுதுக.
'அள்ளல் பழனத்து' எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரப்பாடல் (அல்லது)
'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்ச மூலப்பாடல்.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.2 x 3 = 6**

35. பெண்ணடிமை போக வேண்டும்; பெண் கல்வி பெற வேண்டும். பெண்கள் படித்தால் தான் தம் சொந்தக்

காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. ........ பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

36. கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.
அ) வேண்டும் ஆ) பார் இ) வீடு

37. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 x 5 = 25**

38. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக. **(அல்லது)**
பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39. உங்களின் நண்பர், பிறந்த நாள், பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக. **(அல்லது)**
உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத்தாய்மொழி (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

42. சமூகத்திற்குத் தேவையான உனது பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.
குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுவேன்
1.
2.
3.
4.
5.
**(அல்லது)**
மொழி பெயர்க்க.
1) Strengthen the body. 2) Love your food. 3) Thinking is great 4. Walk like a bull.
5. Union is strength.

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

### பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** **3 x 8 = 24**

43. அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க. **(அல்லது)**
ஆ) நீரின்றி அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் வரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக. **(அல்லது)**
ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் செய்தி கதையின் மூலமாக விளக்குக.

45. அ) கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக. **(அல்லது)**
ஆ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை கட்டுரை வழி நிறுவுக.

------------